# கூட்டு வியாபார ஒப்பந்தம்

_________ம் வருடம் _____________மாதம் ____ம் நாள் ______________

_______________________________________________________ என்ற முகவரியில் வசிக்கும் திரு______________அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு._________ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) (இதுமுதற்கொண்டு இவர் முதல் பார்ட்டி என்று அழைக்கப்படுவார்)

_______________________________________________ என்ற முகவரியில் வசிக்கும் திரு.__________________________ அவர்களின் குமாரர் சுமார் _____வயதுள்ள திரு.________________ (அடையாள அட்டை ______) (கைபேசி எண்.______) (இதுமுதற்கொண்டு இவர் இரண்டாவது பார்ட்டி என்று அழைக்கப்படுவார்)

நாம் இரு பார்ட்டிகளும் சேர்ந்து மனபூவர்மான சம்மதத்தின் பேரில் எழுதிக்கொண்ட கூட்டுவியாபார ஒப்பந்தப் பத்திரம் என்னவென்றால்.

நாம் இரு பார்ட்டிகளும் ____________________________ என்ற விலாசத்தில் அமைந்துள்ள இடத்தில் வியாபார நிறுவனம் துவக்கி __________________ என்ற பெயரில் __________ தேதி முதல் நாம் இருவரும் கூட்டாக வியாபரம் நடத்தி வரவேண்டி, மேற்படி ஸ்தாபனத்திற்கு முதலீட்டு தொகையாக நம்மில் 1வது பார்ட்டி ரூ._________ (ரூபாய்______________ மட்டும்)-யும் 2வது பார்ட்டி ரூ._________ (ரூபாய்______________ மட்டும்) என்ற வகையில் இந்நிறுவனத்திற்கு மொத்த முதலீடு தொகையாக ரூ.________ முதலீடு செய்திருக்கிறோம்.

நாம் இரண்டு பார்ட்டிகளும் மேற்படி ஸ்தாபனத்தை நமது நேரடிப் பொறுப்பில் கூட்டாகக் கவனித்துக் கொண்டு தொழில் விருத்திக்கான செயல்பாடுகளை மேற்கொள்வதென்று மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம்.

நாம் இந்த ஸ்தாபனத்தின் வரவு செலவு கணக்குகளையும், வங்கி சம்மந்தப்பட்ட காரியங்களையும் நாம் இரண்டு பார்ட்டிகளும் கூட்டாக கவனித்து வரவேண்டியது என்றும் வங்கியில் தொகைகளை போட்டு செக்குகளில் இரண்டு பார்ட்டிகளும் கையொப்பமிட்டு வங்கியிலிருந்து தொகைகளை பெற்றுக்கொள்வது என்றும் ஒப்புக்கொள்கிறோம்.

மேற்படி ஸ்தாபனத்திற்கு மேற்கொண்டு முதலீட்டுத் தொகை தேவைப்பட்டால் வெளியில் இருந்து வட்டிக்கு கடன் வாங்கி கொள்வது என்றும், வரவு செலவு கணக்குகளை தவறாமல் சரிவர கவனித்து நாம் பராமரித்து பார்த்துக் கொள்ள வேண்டியது என்றும் கூட்டாக ஒப்புக் கொள்கிறோம்.

நமது தொழில் நிறுவனத்திற்கு தேவையான பொருட்களை தேவைப்படும் நேரத்தில் நம்மில் யார் ஒருவரும் உள்ளூரிலோ, வெளியூரிலோ வாங்கி நிறுவனத் தொழிலில் தொய்வின்றி நடைபெறுவதை உறுதி செய்து கொள்வதென்றும் ஒப்புக் கொண்டுள்ளோம்.

ஒவ்வொரு வருடமும் நிதியாண்டு முடிவுக்கான (மார்ச் 31) வரவு செலவு கணக்குகளை அந்த வருடத்தின் ஏப்ரல் மாத இறுதிக்குள் ஐந்துகை கணக்கெடுத்து சிப்பந்திகள் சம்பளம், ஸ்தாபனத்தின் வாடகை, இதர மற்ற செலவுகள் நீக்கி நாம் நடத்திவரும் ஸ்தாபனத்தில் கிடைக்கும் லாபலோபங்களை ஒன்றாவது மற்றும் இரண்டாவது பார்ட்டிகள் கீழ்கண்ட விகிதாச்சாரப்படி அடைந்துக் கொள்ள வேண்டியது என்றும் ஒப்புக்கொள்கிறோம்.

1வது பார்ட்டி ________ %

2வது பார்ட்டி ________ %

நாம் ______________ பெயரில் செய்து வரும் தொழில் போன்ற மற்றுமொரு தொழில் நிறுவனத்தை நம் இருவரில் யார் ஒருவர் தனித்தோ அல்லது மற்றவர்களுடன் சேர்ந்தோ எப்பொழுதும் செய்வது இல்லை என்றும் ஒப்புக் கொள்கிறோம்.

இந்தியன் பார்ட்னர்ஷிப் ஆக்ட் 1932ன்படி இதில் எழுதவிட்டுப் போன அனைத்து ஷரத்துக்களும் பங்குதாரர்களாகிய நம் இருவரையும் கட்டுப்படுத்தும்.

எதிர்காலத்தில் இக்கூட்டு வியாபாரத்தில் புதிய கூட்டாளி சேர விரும்பினால் இருவரின் சம்மதத்தின் பேரிலேயே புதிய கூட்டாளியை சேர்த்துக் கொள்ள வேண்டியது.

மேலும் இக்கூட்டிலிருந்து ஒரு கூட்டாளி ஓய்வு பெறவோ அல்லது விலகவோ விரும்பினால் மற்ற கூட்டாளிக்கு ______ மாத கால நோட்டீஸ் கொடுக்க வேண்டியது.

இந்தப்படிக்கு நாம் இருவரும் இதில் குறிப்பிட்டுள்ள வருடம், மாதம், தேதியில் கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் மனப்பூர்வமாய் சம்மதித்து எழுதிக் கொண்ட கூட்டு வியாபார ஒப்பந்தப் பத்திரம்.

சாட்சிகள்

1.

2.